19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.

தேதி 04.06.2026

சுருக்கு வழக்கு எண் – 4177/2024

வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு –பு.த.சா. 1

பெயர் – சுகன்யா
தந்தை பெயர் – ரமேஷ்

வயது – 30

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 04.06.2026 நான் திரு. சாய்ராகுல் இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** (எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை. . இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

1) PDC, UDC என்றால் என்ன என்று தெரியுமா என்றால் முழு விளக்கம் தெரியாது. PDC, என்றால் Post dated cheque, UDC என்றால் Undated cheque என்றால் சரிதான். எதசாஆ. 1 ன் படி நாங்கள் எதிரியிடமிருந்து இரண்டு PDC காசோலைகள் மற்றும் இரண்டு UDC காசோலைகள் பெற்றுள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் கடிதத்தில் அவ்வாறு குறிப்பிடபட்டுள்ளது. எதசாஆ.1 போன்று கடிதம் அனைவரிடமும் கொடுக்கப்படும். அது நடைமுறை. எந்த தேதியில் எதிரியிடமிருந்து வழக்கு காசோலை பெறப்பட்டது என்றால் தேதி நினைவில்லை. 2024 ஆம் வருடம் பெறப்பட்டது. எதிரி எதற்காக காசோலை கொடுத்தார் என்றால் அவரால் வாங்கிய பணத்தை செலுத்தமுடியவில்லை என்று நிலுவைத்தொகைக்காக காசோலை கொடுத்தார். எதிரி லோன்

வாங்கும்போது கடனுறுதி சீட்டில் அவரிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் ஆமாம். இந்த வழக்கு எந்த தேதி, மாதம், வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தற்போது நினைவில்லை.

2. எங்கள் நிறுவனத்திடம் கடன் பெற்ற நபர்கள் கடன் தொகையை முன் கூட்டியே கட்டிமுடிக்கவேண்டும் என்றால் கடன்தாரர் எங்கள் நிறுவனத்தை அனுகி வேண்டுகோள் கடிதம்கொடுத்து அதனை எங்கள் மேலாளர் பரிசிலித்து ஒப்புதல் அளித்தபின்னர்தான் Foreclosure செய்யமுடியும் என்றால் ஆமாம். அவ்வாறு Foreclosure செய்யப்படும்போது எங்கள் நிறுவனத்திலிருந்து நிலுவைத்தொகை, Foreclosure charge, வட்டித்தொகையுடம் செலுத்தவேண்டிய பாக்கி குறிப்பிட்டு கடன்தாரருக்கு கடிதம்வழங்கப்படும் என்றால் அது எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனத்தின் Collection Agent –ற்கு கடன் தொகையை வசூல்செய்யும் அதிகாரம் மட்டும்தான் இருக்கம் என்றாலும் Foreclosure செய்யும் அதிகாரம் அவருக்கு கிடையாது என்றால் ஆமாம். ஆனால் புகாரில் Collection Agent செய்ததாக பத்தி 3 –ல் குறிப்பிடபட்டுள்ளது என்றால் புகாரில் குறிப்பிடபட்டுள்ளது.

3. இந்த வழக்கில் எதிரி Foreclosure செய்தது சம்மந்தமாக எதிரி எங்களிடம் எதாவது கடிதம் கொடுத்துள்ளரா என்றாலும் அதனை ஏற்று நாங்கள் எதிரிக்கு ஏதாவது கடிதம் கொடுத்துள்ளேமா என்றால் அலுவலகத்தில் கேட்டுதான் சொல்லமுடியும். எதிரிக்கு நாங்கள் கொடுத்த Tenure கடிதத்தின் படி 10.09.2024 வரை லோன் கட்டி முடிக்க அவருக்கு கால அவகாசம் உள்ளது என்றால் ஆமாம். நாங்கள் எதிரியிடமிருந்து வாங்கிய UDC காசோலையை தவறாக பயன்படுத்தி 15.03.2024 அன்றே 6

மாத காலத்திற்கு முன்னரே இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் எதிரி 6 மாதமாக payment செய்யாததால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அவர் கட்டிய 11 தவணைகளையும் கூட அவர் தாமதமாகதான் கட்டியுள்ளார். எதிரி வீட்டிற்கு சென்ற Collection agent பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் புகார்தாரர் நிறுவனத்தில் 2025 ஆம் வருடம்தான் பணியில் சேர்ந்தேன் என்றால் ஆமாம். வழக்கு காசோலைகளை யார் நிரப்பினார்கள் என்றால் அது எனக்கு தெரியது. புதசாஆ.5 ஒப்பந்தப்படிதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஒப்பந்த சரத்துகளை நாங்கள் பின்பற்றவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி வாங்கிய ரூ. 10 லட்சத்தில் அவர் ரூ. 7,77,000/- செலுத்திய பின்னரும் நாங்கள் தவறுதலாக எதிரி ரூ. 8,10,000/- கட்ட வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 11.42 am**

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.10 pm**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

Sd/- Mrs. P. Magalakshmi, M.L.,

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.